

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (07.07.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜெர்மனியின் கொலோனில் ஜெர்மன் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் 30.07.2023 முதல் 05.08.2023 வரை நடைபெற உள்ள 8வது உலக அளவிலான குள்ள மனிதர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளுவதற்காக தமிழ்நாடு புதுக்கோட்டையைச் சார்ந்த இறகுப்பந்து வீரர் பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நிதியுதவியாக ரூபாய் 2.49 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உடனுள்ளார்.

குற்றாலம் அருவிகளில்

## குளிக்க அனுமதி

தென்காசி, ஜூலை 9-

தென்காசி குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு குறைந்ததால், சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் தற்போது சீசன் களை கட்டி உள்ளது. இங்குள்ள மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவி, புலிஅருவி ஆகிய அனைத்து அருவிகளிலும் தண்ணீர் கொட்டுகிறது. இரு தினங்களுக்கு முன் மெயின் அருவி, ஐந்தருவி ஆகிய அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் சுற்றுலா பயணிகள் குளிக்க போலீசார் தடை விதித்தனர். இதனால் சுற்றுலா பயணிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.

இந்நிலையில் குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு குறைந்ததை அடுத்து அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



புதுக்கோட்டை திருவப்பூர் முத்துமாரியம்மன் திருக்கோயிலில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 5 இணைகளுக்கான திருமணங்களை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் (07.07.2023) தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசை பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

ரூ.20.25 இலட்சம் மதிப்பீட்டில் சீர்வரிசை பொருட்கள்

# இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 27 இணைகளுக்கு திருமணம்

### அமைச்சர் சு.முத்துசாமி நடத்தி வைத்தார்

ஈரோடு, ஜூலை 9-

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில் இந்துசமய அறநிலையத் துறையின் சார்பில், 27 இணைகளுக்கு (ஜோடிகளுக்கு) மாவட்ட வருவாய் அலுவலர் ச.சந்தோஷினி சந்திரா தலைமையில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ஜி.வெங்கடாச்சலம்;, ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி திருமணத்தினை நடத்தி வைத்து தலா ரூ.75,000 மதிப்பில் ரூ.20.25 இலட்சம் மதிப்பீட்டில் மணமக்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கினார்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி பேசியது ...

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் (07.07.2023) சென்னை, இராஜா அண்ணா மலைபுரம்; பசுமைவழிச் சாலை அருகில் கபாலீஸ்ரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் காலை 9.30 மணிமுதல் 10.30 மணிக்குள் இலவச திருமணத்தினை மங்கள நாணை தனது பொற்கரங்களால் கொடுத்து நடத்தி வைத்தார்கள். மேலும், 202324ம் ஆண்டின் சட்டமன்ற பேரவையின் இந்துசமய அறநிலையத் துறையின் வரவு செலவு கூட்டத் தொடரில் மானிய கோரிக்கை விவாதத்தின் போது, இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி இன்றைய தினம் (07.07.2023) தமிழகம்; முழுவதும் 600 இணைகளுக்கு (ஜோடிகள்) திருக்கோவில் நிதி மூலம் திருமணங்கள் நடத்தப்படுகிறது. அதன்படி, ஈரோடு இந்துசமய அறநிலையத்துறை, இணை ஆணையர் மண்டலத்தில் 27 இணைகளுக்கு ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலில் திருமணமும், திருக்கோயில் மண்டபத்தில் விருந்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இலவச திருமண விழாவில் பங்கேற்கும் இணைகளுக்கு 4 கிராம் தங்க திருமாங்கல்யம் மணமக்களுக்கான பட்டு வேட்டி, பட்டுசட்டை, துண்டு, பட்டுபுடவை, ரவிக்கை, மெட்டி, இரும்பு கட்டில், மெத்தை, தலையணை, பாய், போர்வை, கிரைண்டர், கேஸ் அடுப்பு, மிக்சி, பீரோ, கை கடிகாரம், சாமிபடம், பித்தளை குத்துவிளக்கு2, சந்தனக் கிண்ணம், குங்குமசிமில், பித்தளை பூஜை தட்டு, பூஜை மணி, போவினி2, 2 தட்டு, 2 சிறிய டம்ளர், 2 பெரிய டம்ளர், பால் காய்ச்சும் பாத்திரம், சொம்பு மற்றும் 15 அழகு சாதன பொருட்கள் உள்ளிட்ட 45 வகையான சீர்வரிசை பொருட்கள் வழங்கப்படுகிறது. இதன் மதிப்பு இணை ஒன்றுக்கு ரூ.75,000 என மொத்தம் ரூ.20.25 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு இணைகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் 25 நபர்களுக்கு 06.07.2023 மதியம் உணவு, சிற்றுண்டி, இரவு உணவு மற்றும் நேற்று முன்தினம் (07.07.2023) காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு ஆகியவை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மணமக்கள் இன்று போல் என்றும் மகிழ்ச்சியுடன் வாழ இன்றைய தினம் தங்கள் நல்வாழ்க்கையை தொடங்க வேண்டும் என வாழ்த்துகிறேன் என தெரிவித்தார்.

தொடர்ந்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு,ஆயத்தீர் வைத்துறை அமைச்சர் திருமணம் நடைபெற்ற 27 ஜோடி மணமக்களுக்கு சீர் வரிசையினை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிகழ்வில், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் நவமணி, நகர் மன்றத் தலைவர்கள் ஜானகி (சத்தியமங்கலம்), என்.ஆர்.நாகராஜ் (கோபி செட்டிபாளையம்), இந்துசமய அறநிலையத் துறை இணை ஆணையர் பரஞ்ஜோதி, துணைஆணையர் மேனகா, உதவி ஆணையர்கள் அன்னக்கொடி, சுவாமி நாதன், ரமணிகாந்தன், இளையராஜா, இந்துசமய அறங்காவலர் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட கோவில் செயல் அலுவலர்கள், கோவில் ஆய்வாளர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் - கே.ஆர்.முருகேசன் புதல்வி மணவிழா!

### அமைச்சர் பெருமக்கள் - எம்.பி. - எம்.எல்.ஏ.க்கள் வாழ்த்துரை!

புதுக்கோட்டை, ஜூலை 9-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம், சத்திரம் ரெ.கருப்பையா (தங்கம்) - காந்திமதி ஆகியோரின் மகன் வழிப் பேத்தியும், வீர.கோவிந்தன் - அழகம்மாள் ஆகியோரின் மகள் வழிப் பேத்தியும், திருவனந்த புரம் கே.ஆர்.முருகேசன் -சந்திரா ஆகியோரின் புதல்வியுமான டாக்டர் பிரியங்காவுக்கும்



அரியலூர் மாவட்டம், நல்லாம்பித்தை மூக்கப்பன் - மாரியாயி ஆகியோரின் மகன்வழிப் பேரனும், பி. கலியமூர்த்தி - மதுரம் ஆகியோரின் மகள்வழிப் பேரனும் மூ.கந்தசாமி - மணிமேகலை ஆகியோரின் புதல்வருமான டாக்டர் கே.ஸ்ரீராமுக்கும் மண விழா 9.7.2023 - ஞாயிறு காலை 7 மணியளவில் புதுக் கோட்டை - மாலையீடு கற்பக விநாயகர் மஹால் திருமண மண்டபத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடன் நடைபெறுகிறது.

அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன் முன்னாள் மத்திய இணை அமைச்சர் க.வேங்கடபதி, கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் எஸ்.பூச்சி முருகன், இரா. கிரிராஜன் எம்.பி., வை. முத்து ராஜா எம்.எல்.ஏ. இரா. பரந்தாமன் எம்.எல்.ஏ. சின்னதுரை எம்.எல்.ஏ. உள்பட அமைச்சர் பெருமக்கள் - நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் இம்மணவிழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம்,விக்னேஷ் பாலிமர்சின் 5வது இருசக்கர வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனத்தை பர்கூர் சிப்காட்டில்,மாவட்டச் செயலாளர் டி. மதியழகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.இதனால் 500க்கும் மேற்பட்டோர் வேலை வாய்ப்பினால் பயனடைவர்.இதில் நிறுவனத்தின் தலைவர் சிவகுமார்,தொழிலதிபர் கா.சு.வீரமணி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! தவ. பாஞ்சாலன் வரவேற்புரை!

# கறம்பக்குடி தெற்கு ஒன்றியத்தில் பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரை! கவிச்சுடர் கவிதைப்பித்தன் த.சந்திரசேகரன், பி.டி .அரசகுமார் பங்கேற்பு!

புதுக்கோட்டை, ஜூலை 9-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கறம்பக்குடி தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பாக தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர், அவர்களின்

நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் 07.07.2023 வெள்ளிக்கிழமை மாலை: 5 மணிக்கு வெட்டன்விடுதியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. கறம்பக்குடி தெற்கு ஒன்றிய கழக செயலாளரும், புதுக்கோட்டை மாவட்ட அரங்காவல் குழு தலைவருமான தவ.பாஞ்சாலன் அனைவரையும் வரவேற்றார்.

வெ.முத்துக்கிருஷ்ணன், ஆர்.ராமசாமி, டி.சூசைராஜ், உ.முருகேசன், மாலா ராஜேந்திரதுரை, சி.மணிமாறன், ஏ.ஆர்.லெட்சுமணன், எம்.நடராஜன், எம்.நித்யா முருகேசன், கே.சாமி நாதன், சு.மணிக்கிளாஸ், எம்.மயில்வாகணன், கோ.மதியழகன் கோ.அப்பாத்துரை, கோ.பன்னீர், சி.வெங்கடேசன் தேன்மொழி சின்னத்துரை ஆர்.வீரப்பன், எஸ்.பாலன், உ.முத்தையா, எஸ்.ஆர்.பாலையா, வி.கே.வீரப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஆர்.எஸ்.பாரதி, சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார, அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஷ்வரி, க.மதியழகன், எம்.லியாகத்அலி, சுப.சரவணன், சு.சண்முகம், ஆ.செந்தில், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, டாக்டர் குறிஞ்சிவாணன், பூங்குடி எம்.சிவா, கலைஞர்.மு.கருணாநிதி, வடவாளம் க.செ.மணிமாறன், அன்சாரி பாஷீத், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா மற்றும் பலர் பங்கேற்றனர்.

முடிவில் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் தியாக.இளஞ்செழியன் நன்றி கூறினார்.

முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரியும்

# டி.தீபக் - பி.ராஜபிரியா திருமண வரவேற்பு விழா!

### கழகத்தினர் - குடும்பத்தினர் வாழ்த்துகின்றனர்!

திருவள்ளூர், ஜூலை 9-

முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரியும் டி.தீபக் - பி.ராஜபிரியா ஆகியோரின் திருமணம் மற்றும் திருமண வரவேற்பு விழா,



நாளைய தினம் திருவள்ளூரில் நடைபெறுகிறது.

இம்மண விழா பற்றிய விவரம் வருமாறு:

திருவள்ளூர் மாவட்டம், பூங்கந்தூர் கிராமம், (நினைவில் வாழும்) ஜி.பாபு - பி.சரோஜா அம்மாள் ஆகியோரின் பேரனும், பி. தேவராஜ் - டி.ராதா ஆகியோரின் புதல்வரும், முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரிபவருமான டி.தீபக்கிற்கும் திருவள்ளூர் மாவட்டம் - திருத்தணி வட்டம் - முத்துக்கொண்டா புரம் கிராமம் (நினைவில் வாழும்) ஆர்.விஸ்வநாதன் - வி.முருகம்மாள் ஆகியோரின் பேத்தியும், வி.பழநி - பி.நைனியம்மாள் ஆகியோரின் புதல்வியுமான பி.ராஜபிரியாவிற்கும் திருமணம் நாளைய தினம் (9.7.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணி அளவில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெறுகிறது.

அதனைத் தொடர்ந்து, திருமண வரவேற்பு விழா, அன்று மாலை 6 மணி அளவில் திருவள்ளூர், காக்களூர் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள தனமணிராஜ் மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவிலும் - மணவிழா வரவேற்பிலும் கழக நிர்வாகிகள், குடும்பத்தினர், நண்பர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.பி.பூபதி - பி.சங்கரி, பி.சரவணன் - எஸ்.லட்சுமி ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், எண்ணாயிரம் ஊராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள இருளர் குடியிருப்பு இறுதிகட்ட பணியினை விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ நேரில் சென்று பார்வையிட்டார். ஒன்றிய குழுத் தலைவர் சங்கீதாஅரசி ரவிதுரை, ஒன்றியச் செயலாளர் வேம்பி ரவி, ஒன்றிய குழு துணை தலைவர் ஜீவிதா ரவி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுமதி, மூபாரக் அலி, ஊராட்சி மன்ற தலைவர்கள் சண்முகம், அரிகிருஷ்ணன் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் கே.இ. சம்பந்தம்

**ஜூலை 9 (1993)**



நீதிக்கட்சிக் காலம் தொட்டு திராவிட இயக்க பற்றாளராக விளங்கியவர்.

வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும், இராயபுரம் பகுதி அவைத் தலைவராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகத்திற்கு சொந்தமாக ஒரு அலுவலக கட்டிடம் வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பியபோது, இராயபுரத்தில் ஒரு கட்டிடத்தை முன்னின்று விலைபேசி கழகத்திற்கு வாங்கிட துணைபுரிந்தவர். அக்கட்டிடம் பின்னர் 'அறிவகம்' என்று அண்ணாவால் பெயர் சூட்டப்பட்டு தலைமைக் கழகமாக இயங்கியது

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று ஏழு முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**